**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : C.C.No. 21/2017

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution அ.சா. 1
Defence
Court

Name : திரு. ரெங்கசாமி

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 21st August 2019.

முதல் விசாரணை

நான் தற்போது தேனி மாவட்டம் அல்லி நகரம் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 23.9.2016 அன்று காலை 11.00 மணிக்கு ரகசிய தகவலாளி சார்பு ஆய்வாளருக்கு அளித்த தகவலை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொல்லி உத்தரவு படி நானும், த.கா. 1507 ராமசாமி, சார்பு ஆய்வாளர் மற்றும் தகவலாளியுடன் 11.20 மணிக்கு தக்க உபகரணங்களுடன் புறப்பட்டு உத்தமபாளையம் தாலுகா, கோகிலாபுரம் பஸ் நிறுத்தம் அருகில் போதைப்பொருள் தடுப்பு சம்பந்தமாக கண்காணித்துக்கொண்டிருந்த போது தகவலாளி காட்டிய திசையில் தன் கையில் வெள்ளை நிற பிளாஸ்டிக் பையுடன் நின்றுக்கொண்டிருந்தவரை சார்பு ஆய்வாளர் பிடித்து விசாரிக்க அவர் உத்தமபாளையம் தாலுகா, கோகிலாபுரம் 5 வது வார்டு, கிழக்கு தெருவை சேர்ந்த கருத்தக்கண்ணன் மகன் நாகராஜன் என்று கூறினார். அவர் தான் ஆஜர் எதிரி ஆவார். அவரிடம் நாங்கள் அறிமுகம் செய்துக்கொண்டு அடையாள அட்டையை காண்பித்து

தகவலை கூறி அவரை சோதனை செய்ய வேண்டும் என்றும் அதற்காக அவரை அருகில் உள்ள நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ சோதனை செய்ய கேட்க உரிமையுண்டு என்று எடுத்துக்கூற அதற்கு அவர் மறுத்து எங்களையே சோதனை செய்ய சொன்னார். அப்போது தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் காவலர்களாகிய நானும் த.கா. 1507 ராமசாமியும் சாட்சிகளாக இருக்க சோதனை சம்மத கடிதத்தை சார்பு ஆய்வாளர் தயார் செய்தார். அது அ.சா.ஆ.1 ஆகும். எதிரி வைத்திருந்த வெள்ளைநிற பிளாஸ்டிக் பையை சோதனை செய்த போது அதில் உலர்ந்த கஞ்சா இருந்தது. அதை எடைப்போட்டு பார்த்த போது சுமார் 5 கிலோகிராம் எடையுள்ள கஞ்சா இருந்தது. கஞ்சாவை பற்றி எதிரியிடம் விசாரித்த போது எவ்வித அச்சுறுத்தலும், ஆசைவார்த்தைகளும் இன்றி தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனை சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். ஆய்வு நமூனாவை தயார் செய்தார். அது அ.சா.ஆ.2. 14.00 மணி முதல் 14.30 மணி வரை கஞ்சாவை சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.3 ஆகும். மேற்கண்ட மூன்று ஆவணங்களிலும் நானும் தலைமைக்காவலர் ராமசாமியும் சாட்சி கையெழுத்து செய்தோம். கைப்பற்றப்பட்ட கஞ்சாவில் இருந்து மாதிரிக்காகவும் பகுப்பாய்வுக்காகவும் தலா 25 கிராம் வீதம் இரண்டு காக்கி கவரில் எடுத்து நூலால் சுற்றி வழக்கு சம்பந்தமான சிலிப் ஒட்டி என்ஐபி சீல் வைத்து அதற்கு எஸ்.1 எஸ்.2 என்று குறியீடு செய்யப்பட்டது. மீதமுள்ள கஞ்சா 4.950 கிலோகிராமை அதே வெள்ளைநிற பிளாஸ்டிக் சாக்கு பையில் சணலால் கட்டி வழக்கு சம்பந்தமான சிலிப் ஒட்டி என்ஐபி சீல் வைத்து அதற்கு பி.1 என குறியீடு செய்யப்பட்டது. அரசு அனுமதியில்லாமல் கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியை 14.40 மணிக்கு கைது செய்து 15.50 மணிக்கு நிலையம் வந்து கு.எண். 156/2016 பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act படி வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

எங்கள் காவல்நிலையத்தில் இருந்து சம்பவ இடம் சுமார் 40 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. போலீஸ் வாகனத்தில் தான் சம்பவ இடத்திற்கு போனோம். காவல் நிலையம் அருகில் வீடுகள் உள்ளது. கடைகள் இல்லை. எங்கள் காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு போகும் வழியில் கடைகள், அலுவலகங்கள், பள்ளி கல்லூரிகள் உள்ளன என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடம் வரும் வரை தனிநபர் சாட்சிகள் யாரையும் அழைத்து வர சார்பு ஆய்வாளர் முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. போலீஸ் வாகனத்தில் சார்பு ஆய்வாளர் நான்

உட்பட இரண்டு காவலர்கள் தகவலாளி ஆகியோர் போனோம். சம்பவ இடம் கோகிலாபுரம் பஸ் நிறுத்தம் என்றால் சரிதான். அதன் அருகே வீடுகள் கடைகள் உள்ளன. மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அங்கு இருந்த நபர்கள் யாரையும் சாட்சிகளாக இருக்க அழைத்தோமா என்றால் அழைத்தோம். யாரும் வரவில்லை. அவ்வாறு வர மறுத்த நபர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சோதனை சம்மத கடிதத்தில் நாங்களும் எதிரியும் கையெழுத்திட்டதாக சொல்ல வில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சியில் நேரம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மீது என்ஐபி சீல் வைத்ததாகவோ விபரங்கள் அடங்கிய சிலிப் ஒட்டப்பட்டதாகவோ அவற்றில் சாட்சிகள் மற்றும் எதிரி கையொப்பமிட்டதாகவோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆவணங்களை தலைமைக்காவலர் ராமசாமி தான் தயார் செய்தார். அனைத்து ஆவணங்களிலும் எனது கையொப்பத்திற்கு கீழ் தேதி, நேரம் போடவில்லை என்றால் சரிதான். வெள்ளை நிற பையில் எந்த நிறுவனத்தின் பெயர் மற்றும் விளம்பரம் இருந்தது என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொன்னது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வழக்கு ஆவணங்கள் எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றும் எதிரியிடம் இருந்து எந்த சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சொத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை.